தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணையிலிருந்து மீண்டும் தண்ணீர் திறப்பு

காவிரி டெல்டா பாசனத்துக்காக, மேட்டூர் அணை யிலிருந்து வியாழக்கிழமை முதல் மீண்டும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் மழை பெய்து வந்ததால், மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்காக திறந்துவிடப்பட்ட தண்ணீர் கடந்த மாதம் 23ஆம் தேதி நிறுத்தப்பட்டது. தற்போது பாசனப் பகுதிகளில் மழை குறைந்துள்ளது. இதையடுத்து, மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக வியாழக்கிழமை மாலை முதல் நொடிக்கு 8 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. சுரங்க மின் நிலையம், அணை மின் நிலையம் வழியாக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால், நீர் மின் நிலையங்களில் மீண்டும் மின் உற்பத்தி தொடங்கியுள்ளது.

### வெளிநாடுகளில் இருந்து யூரியா இறக்குமதி: விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி அளிக்க ஏற்பாடு

மத்திய அரசின் நடவடிக்கை காரணமாக, தமிழகத்தில் இரண்டு தொழிற்சாலைகளில் யூரியா தயாரிப்பு நிறுத்தப்பட்டுள்ள நிலையில், யூரியா வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து தரப்படுகிறது. மாநிலத்தில் யூரியா கையிருப்பு போதுமான அளவு இருப்பதாகவும், அவற்றை விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர். தமிழகத்தில் மெட்ராஸ் பெர்ட்டிலைஸர்ஸ், தூத்துக்குடி ஸ்பிக் ஆகிய இரண்டு நிறுவனங்கள் யூரியாவை உற்பத்தி செய்து வந்தன. மத்திய அரசின் கடும் விதிகள் காரணமாக, இந்த நிறுவனங்கள் இப்போது

உற்பத்தியை நிறுத்தியுள்ளன. விதிகளைத் தளர்த்தக் கோரி மாநில அரசு விடுத்த வேண்டுகோள் நிராகரிப்பட்டது. இதனிடையே, தமிழகத்தில் விவசாயிகளுக்கு யூரியா போதுமான அளவுக்குக் கிடைக்கவில்லை என்று புகார்கள் கூறப்பட்டன. ஆனால், இந்தப் புகார்களில் உண்மை ஏதுமில்லை என்று வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது. இது குறித்து, அந்தத் துறையின் உயரதிகாரிகள் கூறியது:

தமிழகத்துக்கு தினமும் 10 டன் யூரியா வந்து கொண்டிருக்கிறது. மாநிலத்தின் ஒரு மாதத் தேவையின் அளவு 1.60 லட்சம் டன்னாக உள்ளது. இந்த யூரியா காக்கிநாடா, கிருஷ்ணபட்டினம் உள்ளிட்ட ஆந்திரப் பிரதேச மாநிலங்களில் இருந்து வருகின்றன. அண்மையில் அங்கு வீசிய "ஹுட் ஹுட்' புயல் காரணமாக, யூரியா வருவதில் சிறிது தாமதம் ஏற்பட்டது. இப்போது, தினமும் யூரியா வந்து கொண்டிருக்கிறது. ஆனாலும், தமிழகத்தில் யூரியா விநியோகம் செய்வதில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. இப்போது அனைத்து மாவட்டங்களிலும் சேர்த்து கையிருப்பில் மட்டும் 30 ஆயிரம் டன் யூரியா உள்ளது. மேலும், அடுத்த 5 அல்லது 6 நாள்களுக்குள் 60 ஆயிரம் டன் அளவுக்கு யூரியா வந்து விடும். இதனால், மொத்த கையிருப்பின் அளவு 80 ஆயிரம் டன்னை எட்டும். விவசாயிகள் பயிர்களை நடவு செய்துள்ள நிலையில், இப்போது யூரியாவின் தேவை என்பது மொத்தத் தேவையில் (அதாவது ஒரு மாதத்துக்கு 1.6 லட்சம் டன் என்ற அளவில்) 50 சதவீதம் மட்டுமே தேவை இருக்கும். இதனால், வரும் நாள்களில் கையிருப்பில் இருக்கும் யூரியாவை வைத்து விவசாயிகளின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள்: கிராமங்களில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக, யூரியா விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகளுக்கு அதிகளவு தேவைப்படுமானால், வங்கிகளில்

உறுப்பினர்களாக இல்லாதவர்களும் கூட அங்கு சென்று தங்களுக்குத் தேவையான யூரியாவைப் பெற்றுக் கொள்ளலாம். யூரியாவுக்குப் பதிலாக டி.ஏ.பி., போன்ற உரங்களைப் பயன்படுத்தலாம். ஆனால், அவற்றின் விலை யூரியாவை விட நான்கு மடங்கு அதிகம் என்பதால் விவசாயிகள் யூரியாவையே நாடுகின்றனர். **இரண்டு தொழிற்சாலைகள்:** தமிழகத்தில் மெட்ராஸ் பெர்ட்லைஸர்ஸ், தூத்துக்குடி ஸ்பிக் ஆகிய இரண்டு நிறுவனங்கள் யூரியாவை உற்பத்தி செய்து வந்தன. மத்திய அரசின் கட்டுப்பாடுகள் காரணமாக, அந்த இரு நிறுவனங்களும் உற்பத்தியை நிறுத்தியுள்ளன. இந்த நிலையில், இரு நிறுவனங்கள் உற்பத்தி செய்த அளவுக்கு இணையான உரத்தை சீனா, ஓமன் போன்ற நாடுகளில் இருந்து மத்திய அரசு இறக்குமதி செய்து கொடுக்கிறது. இதைக் கொண்டு விவசாயிகளுக்கான தேவை சமாளிக்கப்படுகிறது என்று வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>கறவை மாடுகள் மூலம் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் உயரும்</u>**

தமிழக அரசு வழங்கி வரும் விலையில்லா கறவை மாடுகள் மூலம் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் உயரும் என்று பால்வளத் துறை அமைச்சர் பி.வி.ரமணா தெரிவித்தார். திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட அதிகத்தூர் இருளர் காலனியில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் சுமதி சிதம்பரநாதன் முன்னிலை வகித்தார். ஒன்றியக் குழுத் தலைவர் தட்சிணாமூர்த்தி வரவேற்றார். இதில் கலந்து கொண்ட பால் வளத்துறை அமைச்சர் பி.வி.ரமணா பயனாளிக்கு கறவை மாடுகளை வழங்கிப் பேசியதாவது:

தமிழக அரசின் சீரிய திட்டமான கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பழங்குடி மக்களின் வாழ்வாதாரம் உயரும். கறவை மாடுகள் பெற்ற

பயனாளிகள் குழுக்களாகப் பதிவு செய்து கூட்டுறவுச் சங்கம் தொடங்கி பாலை ஆவின் நிறுவனத்திற்கு வழங்க வேண்டும். இதற்காக ஆவின் அலுவலர்களும் கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகின்றனர். இந்த வாய்ப்பை பால் உற்பத்தியாளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் அவர்.

இதில் மாவட்ட ஆட்சியர் பேசியதாவது:

அரசின் திட்டங்களை முழுமையாக பொதுமக்கள் பெற்று பயனடைய வேண்டும். முக்கியமாக ஏழை, எளியோரின் வாழ்க்கை உயர வேண்டி விலையில்லா கறவை மாடுகள், ஆடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பல்வேறு தொழில்கள் தொடங்குவதற்கு 100 சதவீத மானியத்தில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றார் அவர். இதைத் தொடர்ந்து 22 பயனாளிகளுக்கு ரூ. 5.50 லட்சம் மதிப்பிலான கறவை மாடுகள் வழங்கப்பட்டன. இதில் பூந்தமல்லி எம்எல்ஏ மணிமாறன், திருவள்ளூர் துணை ஆட்சியர் ராகுல்நாத், கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பன்னீர்செல்வம், மாவட்ட ஆதிதிராவிடர், பழங்குடியினர் துறை அலுவலர் கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு வேளாண் துறை மூலமாகத் தீர்வு**

ஊட்டச்சத்து குறைபாட்டை வேளாண் துறை மூலமாகத் தீர்வு காணும் வகையில் ஊட்டச்சத்து மிகுந்த காய்கறிகள் உள்ளிட்ட உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று, மத்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறைச் செயலாளர் ஆஷிஷ் பகுகுணா தெரிவித்தார். தேசிய தோட்டக்கலை சங்கம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஆகியவை சார்பில் 6-ஆவது இந்திய தோட்டக்கலை 4 நாள் கருத்தரங்கு கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் வியாழக்கிழமை தொடங்கியது. இக்கருத்தரங்கை தமிழக ஆளுநர் கே.ரோசய்யா தொடங்கி

வைத்தார். இதில், மத்திய அரசின் வேளாண் மற்றும் கூட்டுறவுத் துறைச் செயலாளர் ஆஷிஷ் பகுகுணா பேசியது: நாட்டில் தற்போது வேளாண் துறையில், உணவு உற்பத்தியில் பற்றாக்குறை நிலவுகிறது. விவசாயிகளின் அயராத உழைப்பு, விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகள் மூலமாக உணவுப் பொருள் உற்பத்தியில் நாம் தன்னிறைவு அடைந்துள்ளோம். அதேநேரத்தில், இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு பெருமளவில் உள்ளது. இது தேசத்தின் அவமானமாகவும், தர்மசங்கடமாகவும் உள்ளது. ஊட்டச்சத்து குறைபாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு வேளாண் துறை மூலமாக சத்தான காய்கறிகள் மற்றும் ஊட்டச்சத்து தரும் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். ஊட்டச்சத்துக் குறைபாட்டுக்கு வேளாண் துறை மூலமாகவே தீர்வு காண முடியும் என்றார். தமிழக ஆளுநர் கே.ரோசய்யா: இந்தியாவின் முதுகெலும்பாக வேளாண் துறை உள்ளது. மொத்த மக்கள்தொகையில் 60 சதவீதம் பேர் வேளாண் துறையில் உள்ளனர். இந்திய தோட்டக்கலை உற்பத்தி 262 மில்லியன் டன்னில் இருந்து 268 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது. உலகளவில் சீனாவுக்கு அடுத்து இந்தியா அதிக அளவில் பழங்கள், காய்கறிகளை உற்பத்தி செய்கிறது. மலர் ஏற்றுமதியில் நல்ல பிரகாசமான வாய்ப்பு உள்ளது. இந்தியாவின் மலர் ஏற்றுமதி 11 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து வரும் 2020-இல் 20 பில்லியன் அமெரிக்க டாலராக உயர வாய்ப்புள்ளது.

தோட்டக்கலைத் துறையின் தேவை அடுத்த சில ஆண்டுகளில் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. பருவநிலை மாற்றம், ஆள் பற்றாக்குறை, குறைந்துவரும் நிலப் பயன்பாடு ஆகியவை இத்தேவையைப் பூர்த்தி செய்வதில் சவாலாக இருக்கும். எனவே, தோட்டக்கலை உற்பத்தியை அதிகரிப்பது பெரிய சவாலாக இருக்கும் என்றார். ஆராய்ச்சி மையத்தின் நிறுவனத் தலைவர் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன், இந்திய

தோட்டக்கலை சங்கத் தலைவர் கே.எல்.சதா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி உள்பட பலர் பங்கேற்றனர்.

## அவிநாசியில் ரூ. 4.91 லட்சத்திற்கு பருத்தி ஏலம்

அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் புதன்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ. 4.91 லட்சத்திற்கு ஏலம் நடைபெற்றது. ஏ.சி.எம்.எஸ். மையத்தில் நடைபெற்ற ஏலத்தில் 388 பருத்தி மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. இதில் குவிண்டால் ஒன்றுக்கு ஆர்.சி.எச். ரகப்பருத்தி ரூ. 3,900 முதல் ரூ. 4,300 வரையிலும், டி.சி.எச் ரகப்பருத்தி ரூ. 1,800 முதல் ரூ. 2,600 வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 4.91 லட்சத்துக்கு ஏலம் நடைபெற்றது. இதில், குன்னத்தூர், செங்கப்பள்ளி, சேலம், திருப்பத்தூர், ஆத்தூர், மேட்டூர், தர்மபுரி, பொம்மிடிப்பூண்டி, அந்தியூர், குண்டடம், கிணத்துக்கடவு, அன்னூர், கோபி, நீச்சாம்பாளையம் ஆகிய பகுதிகளிலிருந்து 95 பருத்தி விவசாயிகளும், 6 பருத்தி வியாபாரிகளும் பங்கேற்றனர்.

## அரியலூரில் தோட்டக்கலைத் துறை திட்டங்கள் ஆய்வு

அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பயனாளிகளை நேரில் சந்தித்து மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் வியாழக்கிழமை ஆய்வு மேற்கொண்டார். தேசிய தோட்டக்கலை இயக்கம் 2013-14-ம் ஆண்டில் அரியலூர் மாவட்டம், மேலக்கருப்பூர் கிராமத்தில் அய்யனார் என்பவரது வயலில் நடவு செய்யப்பட்டிருந்த எலுமிச்சை வயலை ஆட்சியர் ஆய்வு செய்தார். அப்போது அரசின் திட்டங்கள் அதிக மக்களுக்கு பயன் கிடைக்கும் வகையில் செயல்படுத்த வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். பின்னர் மேலக்கருப்பூரில் செல்வம் என்பவரது வயலில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளதையும், பெரியநாகலூர் விஸ்வநாதன் துவரை

பயிரிட்டுள்ளதையும், அஸ்தினாபுரம் விவசாயி சுரேஷ் 1 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளதையும், கருணாமூர்த்தி என்ற விவசாயி அனுசரணை ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதையும் ஆட்சியர் பார்வையிட்டார். மேலும் தேசிய நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் அருங்கால் கிராமத்தில் முருகேசன் என்பவரது வயலில் சொட்டுநீர்ப் பாசனத்தில் மிளகாய் மற்றும் வெங்காயம் பயிரிடப்பட்டுள்ளதையும், பார்வையிட்டார். சொட்டுநீர்ப் பாசனத்தில் நிரந்தரப் பயிரான மா பயிரிட்டு அதற்கு ஊடுபயிராக பருத்தி பயிர் செய்துள்ள விவசாயி சாமிநாதன் வயலை பார்வையிட்ட ஆட்சியர் அதில் கிடைக்கும் மகசூல் மற்றும் லாபம் குறித்து கேட்டறிந்தார். சொட்டுநீர்ப் பாசனத்தால் நீர் சேமிக்கப்படுவதோடு களைகள் கட்டுப்படுத்தப் படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர். ஆய்வின்போது வேளாண் இணை இயக்குநர் குணசேகரன், தோட்டக்கலை துணை இயக்குநர் சுப்பையா, தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் சரண்யா, மோகன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**தேசிய வேளாண்காப்பீட்டுத் திட்டம்:நவ. 15-க்குள் விவசாயிகள் சேரலாம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் சம்பா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்களது பயிரை வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடு களிலிருந்து பாதுகாத்து மகசூல் இழப்பைத் தவிர்க்கும் வகையில், வரும் 15-ம் தேதிக்குள் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம். இதுகுறித்து வேளாண்மை இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் இதுவரை வங்கிகளில் கடன் பெறும் விவசாயிகள் மட்டும் சேர்ந்து பயனடைந்து வந்தனர். தற்போது தமிழக அரசு கூட்டுறவு மற்றும் தேசிய வங்கிகளில் கடன்பெறாத விவசாயிகளும் பயன்பெறும் வகையில், தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் சேர சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு காப்பீட்டு பிரிமியத் தொகையில் 55% மானியமும், இதர

பிரிவினருக்கு 50% மானியமும் வழங்கி வருகிறது. சம்பா நெற்பயிர் சாகுபடிக்கு ஒரு ஏக்கருக்கு வழங்கப்படும் கடன்தொகை ரூ. 18 ஆயிரம் காப்பீட்டுத் தொகையாகவும், பிரிமியத் தொகை 2 சதவீதம் எனவும் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதன்படி, ஒரு ஏக்கர் சம்பா நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் காப்பீட்டு பிரிமியத் தொகையாக ரூ. 180 செலுத்த வேண்டும். கடன் பெறாத விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையாக ஒரு ஏக்கருக்கு ரூ. 12,800 என நிர்ணயிக்கப்பட்டு, பிரிமியத் தொகையில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 55 சதவீத மானியமும் (அதாவது ஏக்கருக்கு ரூ. 116 பிரிமியம்), இதர விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியமும் (அதாவது ஏக்கருக்கு ரூ. 128 பிரிமியம்) வழங்கப்படுகிறது. வங்கிகளில் கடன் பெறாத விவசாயிகள் பிரிமிய தொகையை நவம்பர் 15-ம் தேதிக்குள் தங்கள் பகுதிகளில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிக் கிளைகளில் சேமிப்பு கணக்கு தொடங்கி அதில் செலுத்தி பயன்பெறலாம். கூடுதல் காப்பீட்டுத் தொகையாக ஏக்கருக்கு ரூ. 11,200 நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கு 24 சதவிகித பிரிமியமாக ரூ. 2,688 செலுத்தி விவசாயிகள் காப்பீடு செய்துகொள்ளலாம். விவசாயிகள் கவனத்துக்கு...

திருவாரூர் மாவட்டத்திலுள்ள விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனை செய்யும் நெல்லுக்கான தொகையை வங்கிக் கணக்கின் மூலம் பெற உடனடியாக வங்கிக் கணக்குத் தொடங்கி பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் எம். மதிவாணன் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 2014-2015 -ம் பருவத்துக்கு மாவட்டத்திலுள்ள அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களிலும் கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கான தொகையை சம்பந்தப்பட்ட விவசாயிகளின் கணக்கில் நேரடியாக

எலக்ட்ரானிக் கிளியாரிங் சிஸ்டத்தில் செலுத்தப்படுகிறது. எனவே, மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் தாங்கள் வசிக்கும் கிராமத்துக்கு அருகிலுள்ள எஸ்பிஐ மற்றும் இதர தேசியமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றில் கணக்குகள் தொடங்கி நெல் கொள்முதல் நிலையங்களில் கொடுக்கப்படும் நெல்லுக்கான தொகையை வங்கி மூலம் பெற்று பயன்பெறலாம்.

**<u>வாழையில் அமோக விளைச்சல் பெறுவதற்கான பயிற்சி வகுப்பு</u>** பாளையங்கோட்டையில் நடைபெற்றது. கிள்ளிகுளம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கீழ் இயங்கி வரும் பாளையங்கோட்டை வேளாண்மை உதவி மையத்தில் வாழையில் அமோக விளைச்சல் பெறுவதற்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது. வாழை சாகுபடி தொழில்நுட்பங்கள், நோய் மற்றும் பூச்சி மேலாண்மை சம்மந்தமான கட்டுப்பாட்டு முறைகள், வாழையில் ஏற்படும் நுண்ணூட்டச் சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முறைகள் குறித்து பயிற்சியளிக்கப்பட்டது. வேளாண் உதவி மைய உதவி பேராசிரியர் சி.ராஜாபாபு வரவேற்றார். பேராசிரியர்கள் சு.திருவுடைநம்பி, ராஜவேல், அருணா ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

## 62,000 பனை விதைகள் நடும் பணி தொடக்கம்

கடலூர் மாவட்டத்தில் மண் அரிப்பைப் தடுக்கும் பொருட்டு 62 ஆயிரத்து 250 பனை விதைகள் நடும் பணியை அமைச்சர் எம்.சி.சம்பத் புதன்கிழமை தொடங்கி வைத்தார். கடலூர் மாவட்டத்தில் அனைத்து பகுதிகளில் இயற்கை வளத்தை பாதுகாக்கவும், மண் அரிப்பை தடுக்கவும் பனை விதை நடும் பணிகளை வணிகவரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை அமைச்சர் எம்.சி.சம்பத், வெள்ளிக் கடற்கரையில் புதன்கிழமை பனை விதைகளை நட்டு தொடங்கிவைத்தார். அப்போது, கல்வித் துறைக்கு 6,000 விதைகள், காவல் துறைக்கு 3,000, சிறைத் துறைக்கு 3,000, சுகாதாரத் துறைக்கு 1,500,

நெடுஞ்சாலைத் துறைக்கு 1,500, நகராட்சிகளுக்கு 1,250, அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியத்துக்கு 46,000, வரக்கால்பட்டு ஊராட்சிக்கு 3,000 விதைகள் என மொத்தம் 65,250 பனை விதைகளை அமைச்சர் வழங்கினார். இதற்கான நிகழ்ச்சியில் ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார், ஆ.அருண்மொழித் தேவன் எம்.பி., நாக.முருகுமாறன் எம்எல்ஏ, நகர்மன்றத் தலைவர்கள் குமரன், அருள் அழகன், அண்ணாகிராம ஒன்றியகுழுத் தலைவர் சுந்தரி முருகன், துணைத் தலைவர் சம்மந்தம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>வெளுத்துவாங்கிய வடகிழக்கு பருவமழை! கோவையில் ஒரே மாதத்தில் சாதனை</u>**

கோவை : கடந்த ஆண்டில், 3 மாதங்களில் பெய்ததை விட, இந்த ஆண்டில் ஒரே மாதத்தில் கோவை மாவட்டத்தில் வடகிழக்குப் பருவமழை அதிகமாகப் பெய்து, மக்களை மகிழ்வித்துள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள கோவை மாவட்டத்திற்கு தென்மேற்குப் பருவமழை மற்றும் வடகிழக்குப் பருவமழை என இரு பருவமழைக் காலங்களிலும் மழை கிடைக்கிறது. ஜூனிலிருந்து செப்டம்பர் வரையிலான தென்மேற்குப் பருவமழை காலத்தில், சராசரியாக 190 மி.மீ., அளவு மழை பெய்யும். ஆனால், சமீபகாலமாக 162 மி.மீ., அளவைத் தாண்டியதில்லை. தென்மேற்குப் பருவமழை, கோவையை ஏமாற்றினாலும், அக்டோபரிலிருந்து டிசம்பர் வரையிலான வடகிழக்குப் பருவமழை, பெரும்பாலும் கோவையை ஏமாற்றியதேயில்லை. இந்த மூன்று மாதங்களில், வழக்கமாக 328 மி.மீ., மழை பெய்யும் என்பது, வானிலை

ஆய்வாளர்களின் கணிப்பு. ஆனால், சமீபத்திய ஆண்டுகளில், இந்த கணிப்பும் தவறாகி வருகிறது. ஏனெனில், கடந்த 2012ல் 303 மி.மீ.,அளவாக இருந்த வடகிழக்குப் பருவமழை, கடந்த ஆண்டில் 247 மி.மீ., ஆகக் குறைந்து விட்டது. ஆனால், யாரும் எதிர்பாராதவிதமாக, இந்த ஆண்டில், வடகிழக்குப் பருவமழை வெளுத்து வாங்கி விட்டது. அதாவது, கடந்த ஆண்டில், 3 மாதங்களில் பெய்த மழையளவை, அக்டோபரில் பெய்த மழை மட்டுமே, மிஞ்சிவிட்டது. கடந்த அக்டோபர் மாதத்தில் மட்டும், 281 மி.மீ., அளவுக்கு மழை பெய்துள்ளதாக, கோவை மாவட்ட மழைமானி நிலையத்தின் புள்ளி விபரங்கள் குறிப்பிடுகின்றன. இதனால், இந்த ஆண்டில் வடகிழக்குப் பருவமழையின் அளவு, 500 மி.மீ.,க்கும் அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்திய ஆண்டுகளில், 2011ம் ஆண்டில் தான், 498 மி.மீ.,அளவுக்கு வடகிழக்குப்பருவமழை பெய்துள்ளது. மாவட்டத்திலேயே, அதிகளவில் மழை பெய்யும் வால்பாறை மலைப்பகுதியில், கடந்த ஆண்டில், 3 மாதங்களிலும் சேர்த்து 231 மி.மீ., மட்டுமே மழை பெய்தது. ஆனால், இந்த ஆண்டில், அக்டோபரில் மட்டுமே, 366 மி.மீ., மழை பெய்திருக்கிறது. இதன் காரணமாக, பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தின் முக்கிய அணையான சோலையாறு அணை நிரம்பிவிட்டது.அது மட்டுமின்றி, இத்திட்டத்தின் ஆணிவேராக விளங்கும் பரம்பிக்குளம் அணையிலும் முழுக் கொள்ளளவான 72 அடி அளவை எட்டி விட்டது. ஆழியாறு அணையும் நிரம்பி வழிகிறது. துாணக்கடவு, பெருவாரிப்பள்ளம் ஆகிய அணைகளிலும் முழுக்கொள்ளளவை எட்டுமளவிற்கு, நீர்மட்டம் உயர்ந்து விட்டது. இதனால், விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தமிழகத்தில், அக்., 18ல் வடகிழக்குப் பருவமழை துவங்கியதாக, வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது. ஆனால், கோவை மாவட்டத்தில் அதற்கு முன்பாகவே நல்ல மழை பெய்து,

வற்றிக்கிடந்த நீர் நிலைகளை மழை வெள்ளம் நன்கு நனைத்து விட்டது. அடுத்தடுத்து தொடர் மழை பெய்ததால், அணைகள் மற்றும் குளங்கள் அனைத்தும் நிரம்பிவிட்டன. கடந்த 30 ஆண்டுகளில், இதுவே அதிகளவு மழைப்பொழிவு என்று வானிலை ஆய்வாளர்கள் கணக்கிட்டுள்ளனர். பருவமழைக் காலம் முடிய, இன்னும் 50 நாட்களுக்கும் மேல் காலஅவகாசம் உள்ளதால், இந்த ஆண்டில் வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், கோவை மாவட்டத்தில் பெய்யும் மழை, வரலாறு படைக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. கோவை மாவட்டத்தில், வடகிழக்குப் பருவமழை காலத்தில் மழைப்பொழிவு (மி.மீ.,) விபரம்:

இடம் 2014 2013 2012 2011

1.அன்னூர் 167 339 246 249

2.பீளமேடு 239 157 232 595

3.கோவை தெற்கு 240 205 245 584

4.மேட்டுப்பாளையம் 351 393 341 591

5.பெ.நா.பாளையம் 248 349 229 486

6.பொள்ளாச்சி 227 238 216 363

7.சூலூர் 222 84 272 410

8.வேளாண் பல்கலை 352 224 224 557

9.வால்பாறை 492 366 232 473

இதில், 2014ம் ஆண்டில் குறிப்பிட்டிருப்பது அக்டோபர் மாதத்தில் பெய்த மழை மட்டுமே.

## <u>இயந்திரம் நடவு நெல்லுக்கு மானியம்</u>

காஞ்சிபுரம்: இயந்திர மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு 2.50 ஏக்கருக்கு 1,500 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. காஞ்சிபுரம் மாவட்டத் தில் நெல் சாகுபடியை அதிகரிக்கும் நோக்கத்தில், தேசிய

வேளாண் வளர்ச்சி நெல் இயக்க திட்டம் மூலம் இந்த மானியம் வழங்கப்படுகிறது. நெல் நடவு செய்த பின்னர் சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு தெரிவித்தால், ஆய்வு செய்த பின்னர் அதற்கான தொகை வழங்கப்படும்.

## <u>கருவேல, சீமை கருவேல மரங்கள் ரூ.1.32 கோடிக்கு ஏலம்</u>

சேலம் : சேலம் மாவட்டத்தில் உள்ள, 15 ஏரிகளில், வனத்துறையால் வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வரும் கருவேட், சீமை கருவேல மரங்கள், 1.32 கோடி ரூபாய்க்கு, வனத்துறையால் நேற்று ஏலம் விடப்பட்டது. சேலம் மாவட்டம், இடைப்பாடி அருகே உள்ள நஞ்சம்பட்டி ஏரி உட்பட, 15 பஞ்சாயத்துக்களுக்கு சொந்தமான ஏரிகளில் வனத்துறை சார்பில், கருவேல், சீமை கருவேல் மரம் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த மரம் தற்போது நல்ல நிலையை எட்டியதை அடுத்து, அவற்றை ஏலம் விட வனத்துறை முடிவு செய்தது.அதற்கான ஏலம், நேற்று சேலம், அஸ்தம்பட்டி சந்தன குடோனில் நடந்தது. தர்மபுரி மண்டல வனபாதுகாவலர் (பொறுப்பு) லோகநாதன் தலைமையில், சேலம் இடைப்படு காடுகள் வனக்கோட்ட அலுவலர் ராஜாங்கம், சேலம் மண்டல வனபாதுகாவலர் கணேசன் ஆகியோர் முன்னிலையில், இடைப்பாடு காடுகளில் வளர்க்கப்பட்டு வரும் கருவேல், சீமை கருவேல் மரங்கள் ஏலம் விடப்பட்டது.இந்த ஏலத்தில், 150க்கும் மேற்பட்ட வியாபாரிகள் ஏலம் எடுத்தனர். இதில், 15 பஞ்சாயத்து ஏரிகளில் வளர்க்கப்பட்டு வரும் மரங்கள், 1.32 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது. ஏலம் எடுத்தவர்கள், இந்த மரங்களை ஆறு மாத காலத்துக்குள் வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும். இதில், சிரமங்கள் ஏற்படின் அது குறித்து வனத்துறை அதிகாரிகளுக்கு தெரிவித்து, அனுமதி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## நாமக்கல் கால்நடை கல்லூரியில் ஆய்வு

நாமக்கல் : கால்நடை கல்லூரி மருத்துவமனை சார்பில், அளிக்கப்படும் சிகிச்சையில், குளறுபடி இருப்பதாக விவசாயிகள் புகார் தெரிவித்திருந்தனர். இதையடுத்து, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி ஆய்வு செய்தார். பின்னர் அவர், நிருபர்களிம் கூறியதாவது:கால்நடை மருத்துவக்கல்லூரி மருத்துவ மனையில், கடந்த மூன்றாண்டில், 3,806 பசுமாடு, 2,077 எருமை மாடு, 246 ஆடு என, 6,129 கால்நடைகளுக்கு செயற்கை கருவூட்டல், 885 கால்நடைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.இங்கே, சிறப்பு மருத்துவ சிகிச்சை பிரிவு, எண்டோஸ்கோபிக் பிரிவு, ஸ்கேன் பிரிவு, இ.சி.ஜி., பிரிவு, அறுவை சிகிச்சை கூடம், ஊடு கதிரியல் பிரிவு, செயற்கை கருவூட்டல், செல்லபிராணி பராமரிப்பு என, 19 வகையான பிரிவுகள் செயல்படுகிறது. எனவே, கால்நடை வளர்ப்போர், உரிய நேரத்தில் பாதிக்கப்பட்ட கால்நடைகளை சிகிச்சைக்கு அனுமதிக்க வேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.கால்நடை மருத்துவக்கல்லூரிக்கு சென்று, கால்நடை வளர்ப்பு, கல்லூரி நிர்வாகம், மாணவருக்கான வசதிகள் குறித்து ஆய்வு செய்தார். கல்லூரி முதல்வர் துரைசாமி, மண்டல இணை இயக்குனர் சக்திவேல், சிகிச்சைத்துறை தலைவர் செல்வராஜ், பேராசிரியர்கள் எசேக்கியல் நெப்போலியன், சுப்பிரமணி, தர்மசீலன், மருத்துவர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## சின்ன வெங்காயம் தொழில்நுட்ப பயிற்சி

நாமக்கல் : "சின்ன வெங்காயத்தில், உயர் சாகுபடி தொழில்நுட்பம் குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் (கே.வி.கே.,), வரும், 13ம் தேதி நடக்கிறது' என, அதன் திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், சின்ன வெங்காயத்தில் உள்ள உயர் ரகங்கள், கோ 5 ரக நாற்று உற்பத்தி, நாற்றங்கால் மேலாண்மை, நடவு முறை, சொட்டு நீர்பாசனம் அமைத்தல், நீர்வழி உரமிடல், களை நிர்வாகம், மண்ணின் ஈரத்தன்மை பாதுகாக்கும் தொழில்நுட்பம், ஊட்டச்சத்து குறைபாடு நிவர்த்தி செய்யும் முறை, பூச்சி நோய் நிர்வாக முறை குறித்து ஒரு நாள் இலவச பயிற்சி முகாம், வரும், 13ம் தேதி, காலை, 9 மணிக்கு நடக்கிறது.எனவே, விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 12ம் தேதிக்குள் தங்களது பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். மேலும் விபரங்களுக்கு, 04286 - 266 345, 266 244 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## நாமக்கல்லில்பருத்தி ஏலம்

நாமக்கல் : நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 1.5 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 20க்கும் மேற்பட்ட

விவசாயிகள், 150 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,500, குறைந்த பட்சமாக, 3,900 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக, 1.50 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியைச் சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**சாமந்தி பூ விலை உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி**

தர்மபுரி: சாமந்தி பூ விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில், தொப்பூர், நல்லம்பள்ளி, பென்னாகரம், பாலக்கோடு, மாரண்டஹள்ளி, வெள்ளிசந்தை, பஞ்சப்பள்ளி உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், சாமந்தி பூ பரவலாக சாகுபடி செய்யப்பட்டுள்ளது. திருமண சீஸன் மற்றும் விழாக்காலங்களில், சாமந்தி பூவுக்கு, பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைக்கிறது. விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூஜை, தீபாவளி, கார்த்திகை, பொங்கல் உள்ளிட்ட பண்டிகை காலங்களில், ஒரு கிலோ சாமந்தி பூ அதிகபட்சமாக, 150 ரூபாய் வரை விற்பனை ஆவது வழக்கம். திருமண முகூர்த்தங்கள் அதிகம் உள்ள மாதங்களிலும், சாமந்தி பூவிற்கு சந்தையில் அதிக விலை கிடைத்து வந்தது. இந்நிலையில், மாவட்டத்தில் சில தினங்களுக்கு முன், சாமந்தி பூ உற்பத்தி அதிகரித்ததன் காரணமாக, விலை கடுமையாக சரிந்தது. தற்போது, சாமந்தி பூ உற்பத்தி குறைந்ததுடன், திருமண சீஸன் தொடங்கி உள்ளதால், சாமந்தி பூவிற்கு சந்தையில் வரவேற்பு ஏற்பட்டுள்ளது. இதனால், ஐந்து நாட்களாக சாமந்தி பூவின் விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. நேற்று, தர்மபுரி பூ மார்க்கெட்டில், ஒரு கிலோ சாமந்தி பூ, 60 ரூபாய் வரை விற்பனை ஆனாது. மேலும், அடுத்தடுத்து, கார்த்திகை மாதம் வரை அதிக திருமண

முகூர்த்தங்கள் உள்ளதால், சாமந்தி பூ விலை மேலும், அதிகரிக்க வாய்ப்புள்ளதாக, விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

**<u>பாரம்பரிய உபகரணங்களை வாங்க ஆர்வம்: விவசாயிகள்</u>**

தர்மபுரி: தொடர் மழையடுத்து, பாரம்பரிய விவசாய உபரகரணங்கள் வாங்கவும், ஏற்கனவே உள்ள உபகரணங்களை சீராமைப்பு செய்வதிலும், விவசாயிகள் தீவிரமாக உள்ளனர். தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், இரண்டு லட்சத்து, 49 ஆயிரத்து, 522 ஹெக்டர் பரப்பளவில் விவசாய பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இதில், நெல், கரும்பு, தக்காளி, மஞ்சள், துவரை, ராகி, சாமை, பருத்தி, தென்னை மற்றும் காய்கறி, மலர் வகைகள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. மாவட்டத்தில், சில ஆண்டுகளாக, போதிய மழையில்லாததால், விவசாயம் பாதிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழை இறுதி கட்டத்திலும், வடகிழக்கு பருவ மழை துவக்கத்திலும், தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் மற்றும் அணைகளுக்கு நீர்வரத்து துவங்கியுள்ளது. மேலும், தொடர் மழை காரணமாக, விவசாய கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளிலும், நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. இதையடுத்து, தர்மபுரி மாவட்டத்தின், பல்வேறு பகுதிகளில், விவசாயிகள், விவசாய பணிகளை துவங்கி உள்ளனர். விவசாய பணிகளுக்காக, பல்வேறு நவீன இயந்திரங்கள் வந்தபோதும், பாத்தி கட்டுதல், களை எடுத்தல், உழவு செய்தல் உள்ளிட்ட பணிகளுக்கு, தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த பல விவசாயிகள், அதிகளவில், பராம்பரிய தளவாட பொருட்களை, தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர். இதனால், விவசாய பணிகளுக்காக, கழப்பை, மண் வெட்டி, களை வெட்டி, கடப்பாறை, வாச்சாத்து உள்ளிட்டவற்றை வார சந்தைகளில், தேர்வு செய்து வாங்கிச் செல்கின்றனர். இதனால், தர்மபுரி

மாவட்டத்தில், தர்மபுரி, நல்லம்பள்ளி, பாலக்கோடு, காரிமங்கலம், இண்டூர், பென்னாகரம் உள்ளிட்ட பகுதிகளில் நடக்கும் வாரச் சந்தைகளில், விவசாய தளவாட பொருட்கள், அதிகளவில் விற்பனையாகி வருகிறது. மேலும், பழுதடைந்த பொருட்களை, இச்சந்தை களுக்கு கொண்டு வந்து சீரமைத்துச் செல்கின்றனர். நல்லம்பள்ளியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியதாவது: விவசாய பணிகளுக்கு, பல நவீன உபகரணங்கள் வந்தாலும், ஒரு சில விவசாய பணிகளுக்கு, மனித ஆற்றல் மூலம் செய்யப்படும் பணி, சிறப்பாக உள்ளது. குறிப்பாக, நிலங்களில், பயிர்கள் சாகுபடி செய்ய பார் அமைத்தல், களை எடுத்தல் உள்ளிட்டவை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். மேலும், உழவு செய்வதற்கு டிராக்டர் பயன்பாட்டிற்கு வந்து, பல ஆண்டுகள் கடந்த நிலையிலும், பயிர்கள் சாகுபடி செய்யப்பட்ட பகுதிகளில் ஊடுசால் ஓட்ட, எருதுகள் மூலமே, உழவு பணி செய்ய முடியும் என்பதால், இன்றளவும், மாவட்டத்தின் பல பகுதிகளில், உழவு பணிக்கு எருதுகளும், கழப்பைகளும் பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு கூறினார்.

## <u>மாட்டுச்சந்தைக்கு வரத்து அதிகரிப்பு</u>

ஈரோடு : ஈரோடு, கருங்கல்பாளையம் மாட்டு சந்தையில், நேற்று பசு, எருமை இனங்கள், என, 800 மாடுகள் வரத்தானது. கருங்கல்பாளையத்தில், புதன் கிழமை அடி மாட்டு சந்தையாகவும், வியாழன் அன்று கறவை மாட்டு சந்தையாகவும் நடக்கும்.மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் கேரளா உள்பட பல பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள், விவசாயிகள், இங்கு வந்து மாடுகளை வாங்கி செல்வர். தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து, மாடுகளை விற்பனைக்காக, இங்கு கொண்டு வருவார்கள்.கடந்த இரண்டு வாரங்களாக, தீபாவளி மற்றும் பருவமழையால், வியாபாரிகள் மற்றும் மாடுகள் வரத்து குறைந்தது. இதனால், வியாபாரம் மந்தமானது.இந்நிலையில், நேற்று நடந்த சந்தைக்கு, 400 பசுமாடுகள், 400 எருமை என, 800 கால்நடைகளை,

விவசாயிகள் கொண்டு வந்தனர். வரும் வாரங்களில், விற்பனை களைகட்டும் என, சந்தை மேலாளர் முருகன் தெரிவித்தார்.

## அரியலூர் மாவட்டத்தில் 11 ஆயிரம் ஹெக்டரில் சம்பா நெல் சாகுபடி

அரியலூர்: அரியலூர் மாவட்ட கலெக்டர் சரவண வேல்ராஜ் வெளியிட்ட அறிக்கை: அரியலூர் மாவட்டத்தில், சம்பா நெல் சாகுபடி பணிகள் முனைப்புடன் நடைபெற்று வருகிறது. இதுவரை, 11 ஆயிரம் ஹெக்டரில் சம்பா நெல் சாகுபடி பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயற்கை இடர்பாடுகளால், நெல் பயிருக்கு ஏற்படும் இழப்பீட்டை சரி செய்து கொள்வதற்காக, பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், விவசாயிகள் அனைவரும், அதற்குறிய பிரிமியம் தொகையை செலுத்தி பயன்பெறலாம். கடன் பெற தகுதியான விவசாயிகள், அதற்குரிறிய படிவத்தை பூர்த்தி செய்து, சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியிலோ அல்லது, தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலோ வரும், 15ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும், என்று கூறப்பட்டுள்ளது.

## நேரடி நெல் விதைப்பில் களை கட்டுப்படுத்த யோசனை

தஞ்சாவூர்: நெல் நடவு வயல்கள் மற்றும் நேரடி விதைப்பு செய்துள்ள வயல்களில், களைகளை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை, வேளாண் உதவி இயக்குநர் மதியரசன் தெரிவித்தார். அவர் வெளியிட்ட அறிக்கை:

தஞ்சை மாவட்டத்தில் சிவவிடுதி, காடுவெட்டிவிடுதி, தோப்புவிடுதி, காவாளிப்பட்டி, தம்பிக்கோட்டை வடகாடு, தம்பிக்கோட்டை மேலக்காடு, தம்பிக்கோட்டை மறவக்காடு, தாமரங்கோட்டை வடக்கு, தாமரங்கோட்டை தெற்கு ஆகிய கிராமங்களில் அதிக பரப்பிலும், துவரங்குறிச்சி வடக்கு, துவரங்குறிச்சி தெற்கு, பொன்னவராயன்கோட்டை, அணைக்காடு, தொக்காலிக்காடு, சேண்டாக்கோட்டை, சின்ன ஆவு டையார் கோயில்,

பழஞ்சூர், ஏரிப்புறக்கரை, கரம்பயம், வேப்பங்காடு, வீரக்குறிச்சி ஆகிய கிராமங்களில் பரவலாகவும் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. இதில், களைகளை கட்டுப்படுத்த, களைக்கொல்லி மருந்துகளை பயன்படுத்த வேண்டும். களைகள் முளைப்பதற்கு முன், பயன்படுத்தக்கூடிய களைக்கொல்லிகளான (பிரிஎமெர்ஜென்ஸ் ஹெர்பிசைடு) தயோபென் கார்ப், 800-1000 மில்லி (அல்லது) பென்டிமெத்தலின் - 1.200 லிட்டர் (அல்லது) பிரிட்டிலா குளோர் மற்றும் சேப்னர் கலந்த கலவையான சோபிட் என்ற வியாபார பெயர் கொண்ட களைக்கொல்லி, 500 மில்லி (அல் லது) பிரிட்டிலாகுளோர் என்ற களைக்கொல்லி, 400 மில்லி மருந்து ஆகியனவற்றில் ஏதேனும், ஒரு மருந்தை தேவையான அளவு மணலுடன் கலந்து மண்ணில் போதிய ஈரப்பதம் இருக்கும் போது விதைத்த, எட்டு நாள் வரை தெளிக்கலாம். தொடர்ந்து, , 30 - 35 நாளில், கைக்களை எடுக்க வேண்டும். களைகள் முளைத்த பின் பயன்படுத்தக் கூடிய களைக் கொல்லிகளான (போஸ்ட் எமெர்ஜென்ஸ் ஹெர்பிசைடு) பிரிட்டிலாகுனோர் மற்றும் சேப்னர் கலந்த கலவை மருந்து - 600 மில்லி (அல்லது) பைரசோ சல்பியூரான், 80 கிராம் (அல்லது) பிஸ்பைரிபேக் சோடியம், 10 கிராம் (அல்லது) அல்மிக்ஸ், 8 கிராம் (அல்லது) Øலோ போப் பியூடைல், 100 கிராம், ஒரு ஏக்கருக்கு என்ற அளவில், ஏதேனும் ஒரு மருந்தை விதைத்த, 14 முதல் 28 நாள் வரை தெளிக்கலாம். நடவு செய்யப்பட்ட வயலாக இருந்தால், களைகள் முளைப்பதற்கு முன் பயன்படுத்தக் கூடிய களைக் கொல்லியான (பிரிஎமெர்ஜென்ஸ் ஹெர் பிசைடு) லோன்டாக்ஸ் பவர் என்ற களைக் கொல்லி - ஏக்கருக்கு, நான்கு கிலோ என்ற அளவில் விதைத்த, 3- 8 நாட்களுக்குள் தேவையான அளவு மணலுடன் கலந்து தெளிக்க வேண்டும்.

களைகள் முளைத்த பின் பயன்படுத்தக் கூடிய களைக்கொல்லியான (போஸ்ட் எமெர்ஜென்ஸ் ஹெர்பிசைடு) நாமினிகோல்டு, 80 மில்லி

மருந்தை, ஒரு ஏக்கருக்கு என்ற அளவில், 14 முதல் 18 நாள் வரை தெளிக்கலாம். 18 முதல் 25 நாள் வரை தெளிக்கும் போது, 100 மில்லி வரையிலும் மருந்தை சற்று கூடுதலாக சேர்த்து தெளிக்கலாம்.

## மழை அதிகரிப்பால் உணவு உற்பத்தி உயரும் வாய்ப்பு

திண்டுக்கல் : திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகபட்ச மழை பெய்துள்ளதால் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 5 லட்சம் மெட்ரிக் டன்னை விட உணவு உற்பத்தி அதிகரிக்குமென கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்தார். வறட்சியால் வேடசந்தூர் ஒன்றிய பகுதிகளில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்த ஆண்டு அதிகபட்ச மழை பெய்துள்ளதால் வேடசந்தூர் ஒன்றியம் கணேசபுரம், செல்லகுட்டியூர் பகுதியில் நெல், பூசணி, துவரை, தட்டை, மக்காச்சோளம் பயிரிடப்பட்டுள்ளன. கலெக்டர் வெங்கடாசலம் வயல்வெளிகளை நேற்று பார்வையிட்டார். பின் அவர் கூறியதாவது: "இந்த ஆண்டு அக்டோபர் வரை 770 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. சராசரியை காட்டிலும் 163 மி.மீ., அதிகமாகும். அதிக மழை பெய்துள்ளதால் மொத்த சாகுபடி பரப்பான 1.75 லட்சம் எக்டேரிலும் விவசாயம் மேற்கொள்ள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். உணவு உற்பத்திக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 5 லட்சம் மெட்ரிக் டன்னை விட மகசூல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கிறோம். துவரை நாற்றங்கால் நடவுமுறை, திருந்திய நெல் சாகுபடிமுறை குறித்து விவசாயிகளுக்கு அதிகாரிகள் பயிற்சி அளித்து வருகின்றனர். அனைத்து வட்டார வேளாண் விரிவாக்க மையங்களிலும் தேவையான இடுபொருட்கள் இருப்பு உள்ளன,' என்றார். வேளாண் இணை இயக்குனர் சம்பத் உடனிருந்தார்.

## மலைக் காய்கறிகள் விலை அதிகரிப்பு

கூடலூர் : தமிழக கேரள மாநிலங்களுக்கு இடையேயான மலைப்பாதையில் போக்குவரத்து தடை காரணமாக மலைக் காய்கறிகள் விலை அதிகரித் துள்ளது. தமிழக கேரள எல்லையோரத்தில் அமைந்துள்ளது தேனி மாவட்டம். தேனி மாவட்டத்தில் இருந்து கேரளா செல்வதற்கு குமுளி, கம்பம் மெட்டு, போடி மெட்டு ஆகிய மலைப்பாதைகள் உள்ளன. கடந்த சில தினங்களாக பெய்த கன மழையால் போடி மெட்டு மலைப்பாதை சேதமடைந்து பல நாட்களாக போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், கொடைக்கானல் மலைப்பாதையிலும் மண்சரிவால் போக்குவரத்து தடை ஏற்பட்டது. தேனி மாவட்டத்திற்கு கேரளப் பகுதிகளில் இருந்து மலைக்காய்கறிகளான உருளைக் கிழங்கு, பீன்ஸ், கேரட், பீட்ரூட், சவ்சவ் ஆகிய காய்கறிகள் அதிகமாக வருகின்றன. கடந்த சில தினங்களாக கேரளாவில் பெய்த கன மழையாலும், இணைப்புப் பாதையில் ஏற்பட்ட போக்குவரத்து தடையாலும் தேனி மாவட்டத்திற்கு இக்காய்கறிகள் வரத்து குறைந்தன. இதனைத் தொடர்ந்து ஊட்டி உள்ளிட்ட தூரமான இடங்களில் இருந்த இக்காய்கறிகள் கொண்டு வரப்பட்டன. இதனால், கிலோவிற்கு 30 ரூபாயாக இருந்த உருளைக் கிழங்கு 40 ரூபாயாகவும், 36 ரூபாயாக இருந்த பீன்ஸ் 50 ரூபாயாகவும், 30 ரூபாயாக இருந்த கேரட் 50 ரூபாயாகவும் விலை உயர்ந்துள்ளன. போக்குவரத்து முழுமையாக சீராகும் வரை இந்த விலை ஏற்றம் இருக்கும். மேலும், மூணாறு அருகே மழையால் உருளைக்கிழங்கு சாகுபடி முழுவதும் பாதிக்கப்பட்டது. விவசாய நிலங்களிலேயே உருளைக் கிழங்கு அழுகிய நிலையில் இருந்ததால் உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது. இதுவும் விலையேற்றத்திற்கு காரணமாக அமைந்துள்ளது.

## தண்ணீர் திறக்கப்பட்டு 15 நாட்களாகியும் நிரம்பி வழியும் சோத்துப்பாறை அணை

பெரியகுளம் : சோத்துப்பாறைஅணை 13 ஆண்டுகளில் முதல் முறையாக பாசனத்திற்காக திறந்து விடப்பட்டு 15 நாட்கள் ஆகியும் தொடர்ந்து நிரம்பி வழிகிறது. வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்ததாலும், கொடைக்கானல் மலைப்பகுதிகளில் மழை நீர் வரத்தாலும், சோத்துப்பாறை அணை நீர் மட்டம் 17வது முறையாக அக்., 17ம் தேதி நிரம்பியது. சோத்துப்பாறை அணை 2001ம் ஆண்டு பாசனத்திற்கு திறக்கப்பட்டது. 2005, 2012, 2013ம் ஆண்டு முறையே அணை இருமுறை நிரம்பியது. இது வரை 16 முறை நிரம்பியுள்ளது. முதல் பதிவு: 2001ம் ஆண்டு முதல் முறையாக பாசனத்திற்கு திறந்து விடப்பட்ட நிலையில், ஒவ்வொரு முறையும் அணை நிரம்பும் போதும் அதிகபட்சமாக ஒரு வாரத்திற்குள் பாசனத்திற்கு நீர் திறந்து விடப்படும். நீர் வரத்தும் குறைந்து விடும் சில தினங்களிலே மறுகால் பாய்வது நின்றுவிடும். இது தான் பொதுப்பணித் துறையின் பதிவு. ஆனால் இதற்கு மாறாக விவசாயிகளுக்கு மகிழ்ச்சியூட்டும் விதமாக தற்போது (2014ம்) அக்.,17ல் அணை நிரம்பி வழிந்தது. அக்.,23ல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்ட நிலையில் முதன் முறையாக நேற்றும் (நவ.,6) 15 வது நாளாக அணை நீர் மறுகால் பாய்வது இதுவே முதல் பதிவாகும். நேற்றைய நிலவரப்படி அணையில் 126 அடி நீர் நிரம்பியுள்ள நிலையில் 15 கனஅடி தண்ணீர் அப்படியே மறுகால் பாய்கிறது. நீர் வெளியேற்றம்: அக்.,23ல் இருந்து டிசம்பர் 15 வரை பெரியகுளம் நகர் பகுதிக்கு வினாடிக்கு 3 கனஅடி குடிநீர் வினியோகம் உட்பட பாசனத்திற்காக 30 கனஅடியும், டிசம்பர் 16 முதல் 2015ம் ஆண்டு ஜன.,15 வரை 27 கனஅடியும், ஜன.,16 முதல் மார்ச் 15 வரை 25 கனஅடியும், மூன்று தவணைகளாக 145 நாட்களுக்கு அணைநீர்

வினியோகம் செய்யப்படும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்திருந்தனர். வடகிழக்கு பருவமழை தொடரும் பட்சத்தில் 145 நாட்கள் எண்ணிக்கை அதிகமாகும் நிலை உருவாகி விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தும் நிலை முதன் முறையாக உருவாகியுள்ளது. பயன்பெறும் பகுதிகள்: அணை நீரினால் பழைய ஆயக்கட்டு பகுதிகளான பெரியகுளம் கண்மாய், தாமரைக்குளம் கண்மாய், பாப்பிபட்டி கண்மாய்களில் உள்ள ஆயிரத்து 825 ஏக்கர் உள்ள விவசாய நிலங்களும். புதிய ஆயக்கட்டு பகுதிகளான லட்சுமிபுரம் பகுதிகளில் உள்ள ஆயிரத்து 40 ஏக்கர் விவசாய நிலங்களும் பயன்றுபெறும். நூற்றுக்கணக்கான கிணறுகளின் நீர் மட்டம் உயரும்.

**<u>பிளவக்கல் அணை நிரம்ப தேவை 3 அடி நீர்; அடுத்த மழையில் அணை திறப்பது உறுதி</u>**

வத்திராயிருப்பு : பருவமழையால் மெதுவாக நிரம்பத் துவங்கிய பிளவக்கல் அணைகள் நிரம்பும் நிலையில் உள்ளன. 3 அடி மட்டுமே உள்ள நிலையில் அடுத்து பெய்யும் மழையின் போது அணை திறப்பது உறுதியாகி உள்ளது. வத்திராயிருப்பு பகுதியில் போதிய மழை இன்றி தூறலும் சாரலுமாக பெய்தது. கண்மாய், கால்வாய்களுக்கு நீர்வரத்து இல்லாமல் இருந்தது. மேற்குத்தொடர்ச்சி மலைகளை யொட்டிய பிளவக்கல் அணைகளுக்கும் நீர்வரத்து இல்லாமல் இருந்தது. கடந்த வாரம் அவ்வப்போது பெய்த மழையால் இங்கு நீர்வரத்து ஏற்பட்டது. பெரியாறு, மற்றும் கோவிலாறு இரு அணைகளும் மிக மெதுவாக நிரம்பத்துவங்கின. பெரியாறு அணை நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து 48 அடிக்கு 43 அடியை எட்டியுள்ளது. இதன் முழு உயரத்திற்கும் தண்ணீர் தேக்குவது ஆபத்தானது என்பதால் 45 அடியை எட்டியவுடன் அணை நீர் திறக்கப்பட்டு நீர் வெளியேற்றப்படும். அதன் பின் அணைக்கு வந்து சேரும் நீரின் அளவை பொறுத்து அதே அளவு நீர் வெளியேற்றப்படும். நீர்மட்டம் தொடர்ந்து 45 அடியிலேயே

தக்கவைக்கப்படும். இந்த அடிப்படையில் தற்போது அணை நிரம்புவதற்கு இன்னும் 3 அடி மட்டுமே உள்ளது. அடுத்து ஒருநாள் கனமழையோ, சாதாரண மழையோ பெய்தால் அணை நிரம்பிவிடும். அப்போது நீரை திறந்து விடவேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படும். இது போன்று42 அடி கொண்ட கோவிலாறு அணையில் 30 அடி நீர் மட்டுமே உள்ளது. பொதுப்பணித்துறை அதிகாரிகள் முகாமிட்டு இரு அணைகளின் நிலையை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>பயிர்களை தாக்கும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் விளக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவு</u>

திண்டுக்கல், : மழைகாலங்களில் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் நோய்கள் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான முன் நடவடிக்கைகள் உள்ளிட்ட விபரங்களை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. விவசாய மேம்பாட்டிற்காக வேளாண்மை உள் ளிட்ட பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். வேளாண்மை இணை இயக்குநர் சம்பத் முன்னிலை வகித்தார். பருவமழை பொழிவைத் தொடர்ந்து விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் பயிர் சாகு படியை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக விவசாயிகளுக்குத் தேவையான வசதிகளை செய்து தர கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. கலெக்டர் பேசுகையில், ‘அனைத்து வேளாண்மை

உதவி மையத்திலும் போதிய அளவு விதை இருப்பு வைத்திடவும், நடப்பு பருவத்திற்கு தேவையான புதிய நெல் ரகமான கோ-50 நெல் ரக மும் வரவழைக்கப்பட்டுள் ளது. மேலும் உரத்தட்டுப் பாடு ஏற்படாத வகையில் தமிழ்நாடு நுகர்வோர் வேளாண் கூட்டுறவு விற்பனை இணையத்தின் மூலம் 500டன் யூரியா உரம் வரவழைக்கப்பட உள்ளது. இவை கூட்டுறவு சங்கங்கள் மூலம் தொப்பம்பட்டி, பழநி, ஒட்டன்சத்திரம், வத்தலக்குண்டு ஆகிய பகுதிகளுக்கு முதல்கட்டமாக வழங்கப்பட உள்ளது. தொடர்ந்து இரண் டொரு நாளில் ஆயிரம் டன் யூரியாவும், பின்பு 2000 டன்னும் வர உள்ளது. இந்த உரத்தை கூட்டுறவு சங்கங்கள் மூலம் மற்ற பகுதிகளுக்கும் தொடர்ச்சியாக வழங்கப்பட உள்ளது. உரத்தட்டுப்பாடு ஏற் படாத வகையில் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது. மேலும் உர விற்பனை நிலையங்களைக் கண்காணிக்க வேளாண்மை உதவி இயக்குநர் அளவிலான பறக்கும்படை குழு அமைக்கப்பட்டு கண்காணி க்கப்பட்டு வருகிறது. மேலும் பயிர் இயக்கத்திட்டத்தின்கீழ் உளுந்து, பாசிப்பயறு, துவரை, கொண்டக்கடலை உள் ளிட்ட பயிர்கள் விளைவிக்க நிர்ணயிக்கப்பட்ட குறியீடுகள் எந்த அளவு நிறைவேற்றப்பட்டுள்ளது என்றும் ஆய்வு செய்யப்பட்டது. இதன்படி நடப்பாண்டு 178 ஹெக்டேர் பரப்பளவில் விதைப்பண்ணை செயல்படுத்தப்பட்டு சாத னை இலக்கை அடைந்துள்ளது. மழைகாலங்களில் பயிர்களுக்கு சேதம் விளை விக்கும் நோய்கள், அவற் றைக் கட்டுப்படுத்துவதற் கான முன் நடவடிக்கைகள் உள்ளிட்ட விபரங்களை விவசாயிகளுக்கு தெரிவிக்க வேண் டும். இவ்வாறு அவர் பேசி னார். ஆய்வுக்கூட்டத்தில் தோட்டக்கலை துணை இயக்குநர்கள் ராமநாதன், பாண்டி, பட்டுவளர்ச்சித்துறை துணை இயக்குநர் சச்சிதானந்தம், வேளா ண்மைப் பொறியியல்துறை செயற்பொறியாளர் ராஜேந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## 15 ஏரிகளில் வளர்ந்துள்ள கருவேல் மரங்கள் ரூ1.32 கோடிக்கு ஏலம் போனது

சேலம், : சேலம் இடைபடுகாடுகள் வனக்கோ ட்டம் சார்பில் ஏரிகளில் வளர்ந்துள்ள கருவேல், சீமைகருவேல் மரங்கள் ஏலம் நேற்று அஸ்தம்பட்டி சந்தனமர கிடங்கு கூட்ட அரங்கில் நடந்தது. தர்மபுரி வன மண்டல பாதுகாவலர் (பொறுப்பு) லோகநாதன் தலைமை வகித்தார். சேலம் மண்டல வன பாதுகாவலர் கணேசன், இடைபடுகாடுகள் வனக்கோட்ட அலு வலர் ராஜாங்கம் முன்னி லை வகித்தனர். சேலம் மாவட்டத்தில் உள்ள 15 ஊராட்சிகளில் உள்ள குண்டியப்பட்டி ஏரி, செட்டிமாங்குறிச்சி, நாவலூர் சின்ன ஏரி, இலுப்பநத்தம் ஏரி உள்ளிட்ட ஏரிகளில் வளர்ந்துள்ள கருவேல், சீமை கருவேல் மரங்கள் வெட்டிக் கொள்ள ஏலம் விடப்பட்டது. இதனை ஏலத்தில் 150க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டனர். கருவேல் மரங்கள் ரூ 1.32 கோடிக்கு ஏலம் போனது.

## விவசாயிகள் தரமான விதைகளை தேர்வு செய்ய வேண்டும் இணை இயக்குனர் அறிவுரை

கிருஷ்ணகிரி, :விவசாயிகள் தரமான விதைகளை தேர்வு செய்ய வேண்டும் என கோவை விதை சான்று இணை இயக்குனர் ஆலோசனை வழங்கினார். கிருஷ்ணகிரி நகரில் செயல்பட்டு வரும் விதை பரிசோதனை நிலையத்தை கோவை விதை சான்று இணை இயக்குனர் பழனி சாமி ஆய்வு செய்தார். அப்போது அங்கு விதை பரிசோதனை செய்யும் முறைகளை பார்வையிட்டார். அப்போது அவர் கூறியதாவது: கிருஷ்ணகிரி விதை பரிசோதனை நிலையத்தில் இவ்வாண்டு 74 சான்று விதை மாதிரிகளும், 899 ஆய்வாளர் விதை மாதிரிகளும், 310 பணி விதை மாதிரிகளும் பெறப்பட்டுள்ளது. அவ்வாறு பெறப்பட்ட விதை மாதிரிகளில் 71 சான்று விதை மாதிரிகள், 898 ஆய்வாளர் விதை மாதிரிகள் மற்றும் 308 பணி விதை மாதிரிகள் என மொத்தம் 1277 விதை மாதிரிகளுக்கு பகுப்பாய்வு

முடிவறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் சாகுபடிக்கு தரமான விதை களை தேர்வு செய்து பயன்படுத்திட வேண்டும். மேலும் விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் பணி விதை மாதிரி களை இந்நிலையத்திற்கு அனுப்பி விதைகளின் தரத்தினை அறிந்து தரமான விதைகளை பயன்படுத்த சாகுபடி செய்ய வேண்டும் என்றார். ஆய்வின் போது தர்ம புரி விதைப் பரிசோ தனை அலுவலர் கமலா, கிருஷ்ணகிரி விதை பரிசோ தனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ஜெகதீசன் மற்றும் ஜான் லூர்து சேவி யர் ஆகியோர் உடனிருந்தனர்.

**<u>போச்சம்பள்ளி பகுதியில் பூத்துகுலுங்கும் செங்காந்தள் மலர்</u>**

போச்சம்பள்ளி, :தொடர் மழையால் போச்சம்பள்ளி மற்றும் சுற்று வட்டார பகுதியில் செங்காந்தள் பூத்து குலுங்குகிறது. செங்காந்தள் செடிகள் உயர்ந்த மலைகளிலும், மலை முகடு, சரிவுகளிலும் அதிகளவு காணப்படும். இதன் மலரை பார்க்கும் போது நெருப்பு ஜூவாலை போல் தெரியும். ரத்த நிறத் தில் காணப்படும். செங்காந்தள் மலர் புற்றுநோயை தீர்க்கக் கூடிய அரிய மருத்துவ குணம் கொண் டது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தண்ணீர் குறைந்த பகுதியிலும் செழி த்து வளரும் தன்மை கொண்டது. புற்று நோயை தீர்க்கும் மருத்துவ குண த்தால் உலக அளவில் வர வேற்பு அதிகரித்துள்ளது. போச்சம்பள்ளி சுற்று வட்டார பகுதிகளில் பெய்த தொடர் மழையால் பல்வேறு இடங்களில் இந்த மலர் பூத்து குலுங்குவது கண்கொள்ளா காட்சியாக உள்ளது. இதனை மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் செல்கின்றனர்.

**<u>மீன் உற்பத்தியாளர்களுக்கு செயல்விளக்க பயிற்சி</u>**

காரைக்கால், : மீன் உற்பத்தி சார்ந்த விவசாயிகளுக்கு, வேளாண்மை துறையின் கீழ் செயல்படும் ஆத்மா முகமையின் மூலம், மீன் உற்பத்தியில் உணவு மேலாண்மை குறித்த செயல் விளக்கப்பயிற்சி நடைபெற்றது. காரைக்கால் கோட்டுச்சேரி பண்ணைத்தகவல் மற்றும் ஆலோசனை

மையத்திற்குட்பட்ட கங்கை ஆத்மா குழுவைச்சேர்ந்த 20 மீன் உற்பதியாளர்ளுக்கு, புத்தக்குடியில் உள்ள மீன் பண்ணையில் இந்த பயிற்சி நடைபெற்றது. மீன் பண்ணையின் உரிமையாளர் சம்சுதீன் மீன் உற்பத்தியாளர்களுக்கு பயிற்சியின் நோக்கம், சிறிய, பெரிய மீன்களுக்கான உணவு முறை மற்றும் பயன் குறித்து விளக்கி கூறினார்.முகாமில், காரைக்கால் கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன், ஆத்மா திட்ட துணை இயக்குனர் முத்துகிருஷ்ணன், வேளாண் அலுவலர் சுப ஆனந்தி, மீன்வளத்துறை மேலாளர் கந்தசாமி மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**ஆத்மா குழுக்களுக்கு மரம் வளர்ப்பு பயிற்சி**

காரைக்கால், : காரைக் கால் ஆத்மா குழுக்களுக்கு, தமிழகப்பகுதியான மயிலாடுதுறை, நல்லத்துக்குடி மற்றும் பூந்தோட்டம் பகுதியில் மரம் வளர்ப்பு சார்ந்த ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடைபெற்றது. வரிச்சிக்குடி கற்பக விநா யகர் ஆத்மா குழு, விழிதியூர் பிடாரி அம்மன் ஆத்மா குழு விவசாயிகளுக்கு, ஆடுதுறையில் உள்ள தமிழநாடு நெல் ஆராய்ச்சி நிலையம் மயிலாடுதுறை, நல்லத்துக்குடி மற்றும் பூந்தோட்டம் பகுதியில் உள்ள தமிழ்நாடு காகித ஆலையின் ஒப்பந்தகாரர்கள் பண்ணையில் இந்த மரம் வளர்ப்பு சார்ந்த ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது.பயிற்சியில், சவுக்கு மரம், யூகலிப்டஸ் போன்ற லாபம் தரக்கூடிய மரப்பயிர்களின் வளர்ப்பு குறித்து, தமிழ்நாடு காகித ஆலையைச்சேர்ந்த ஒப்பந்ததாரர் வரதராஜன் விளக்கினார். முகாமில், காரைக்கால் ஆத்மா திட்ட துணை இயக்குனர் முத்துகிருஷ்ணன், வேளாண் அலுவலர் சுப ஆனந்தி, மற்றும் களப்பணியாளர்கள் கலந்து கொண்ட னர்.

**தொடர் மழையால் அவரை வரத்து குறைவு அதிரடியாக விலை உயர்வு**

கம்பம், :கம்பம் பகுதியில் தொடர் மழை காரணமாக அவரைக்காய் வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை 2 மடங்காக உயர்ந்துள்ளது. கம்பம் சுற்றுவட்டார கிராமங்களான காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி,

நாராயணத்தேவன்பட்டி, சுருளிப்பட்டி, அணைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் காய்கறிகள் பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு அறுவடை செய்யப்படும் காய்கறிகள் மதுரை, திருச்சி, சென்னை மற்றும் உள்ளூர் சந்தைகளில் மட்டுமன்றி கேரளாவில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த 15 நாட்களுக்கு மேலாக இப்பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழையால் அவரை செடிகளில் பூக்கள் உதிர்ந்து விளைச்சல் பாதியாக குறைந்துள்ளது. இதனால் தற்போது விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், கடந்த ஆண்டு போதிய மழையின்றி பயிர்களை காப்பாற்ற வழியின்றி மிகவும் சிரமப்பட்டோம். நடப்பாண்டில் விவசாயிகள் எதிர்பார்க்காத அளவிற்கு பருவமழை பெய்து வருகிறது. இதனால் பீட்ரூட், முள்ளங்கி உள்ளிட்ட காய்கறிகளில் செவட்டை நோய் தாக்கி முழுவதும் சேதமடைந்து விட்டது. தொடர் மழையால் அவரை செடிகளில் பூக்கள் உதிர்ந்து வரத்து குறைந்துள்ளது. மழைக்கு முன்பாக 30 மூடை வரை அறுவடை செய்யப்படும் நிலங்களில் தற்போது 20 மூடை மட்டுமே வருகிறது. இதன் காரணமாகவும் விலை உயந்துள்ளது. கடந்த மாதம் முதல் தர காய் கிலோ ரூ. 30க்கு விற்றது. தற்போது ரூ.50 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அவரை பயிரிட்ட விவசாயிகளுக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றனர்.

## <u>சின்னமனூர் பகுதியில் வெளுத்து வாங்கியது பருவமழை வெள்ளைச்சோள காட்டிலும் மழை</u>

சின்னமனூர், :சின்னமனூர் பகுதிகளில் பருவமழையால் மானாவாரி நிலங்களில் பயிரிட்டுள்ள வெள்ளைச்சோளம் அமோக விளைச்சல் கண்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சின்னமனூரை சுற்றி உள்ள ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம், மூர்த்திநாயக்கன்பட்டி, தென்பழனி, அப்பிபட்டி, கன்னிசேர்வைபட்டி,

எரசக்கநாயக்கனூர், சீப்பாலக்கோட்டை, காமாட்சிபுரம், முத்துலாபுரம், சின்னஓவுலாபுரம், அய்யம்பட்டி, புலிக்குத்தி, சிந்தலைச்சேரி, சங்கராபுரம், தம்மிநாயக்கன்பட்டி, நா கலாபுரம், புதுக்கோட்டை, பொட்டிபுரம் உள்ளிட்ட கிராமங்களில் மானாவரி விவசாயம் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நடந்து வருகிறது. கடந்த 3 மாதத்திற்கு முன்பு தென்மேற்கு பருவமழையை நம்பி சோளம் அதிகளவில் பயிரிடப்பட்டது. போதிய மழையில்லாத நிலையில் 110 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் சோளம் பெரிய அளவில் விளைச்சல் தரவில்லை. தற்போது வடகிழக்கு பருவமழை மாவட்டத்தில் பரவலாக பெய்து வருகிறது. இதனால் கலப் பின ரக வெள்ளைச்சோளம் பயிரிடப்பட்ட நிலங்கள் அமோக விளைச்சலை கண்டுள்ளது. இரண்டரை மாத பயிரான இந்த சோளத்தின் வளர்ச்சிக்கு இதமான வெப்பம், மிதமான குளிர் மிகவும் அவசியம். சின்னமனூர் பகுதியில் உள்ள மானாவாரி நிலங்களில் வெள்ளைச்சோளம் அமோக விளைச்சல் கண்டுள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சின்னமனூரை சுற்றி உள்ள ஓடைப்பட்டி, வெள்ளையம்மாள்புரம், மூர்த்திநாயக்கன்பட்டி, தென்பழனி, அப்பிபட்டி, கன்னிசேர்வைபட்டி, எரசக்கநாயக்கனூர், சீப்பாலக்கோட்டை, காமாட்சிபுரம், முத்துலாபுரம், சின்னஓவுலாபுரம், அய்யம்பட்டி, புலிக்குத்தி, சிந்தலைச்சேரி, சங்கராபுரம், தம்மிநாயக்கன்பட்டி, நா கலாபுரம், புதுக்கோட்டை, பொட்டிபுரம் உள்ளிட்ட கிராமங்களில் மானாவரி விவசாயம் ஆயிரக்கணக்கான ஏக்கரில் நடந்து வருகிறது. கடந்த 3 மாதத்திற்கு முன்பு தென்மேற்கு பருவமழையை நம்பி சோளம் அதிகளவில் பயிரிடப்பட்டது. போதிய மழையில்லாத நிலையில் 110 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் சோளம் பெரிய அளவில் விளைச்சல் தரவில்லை. தற்போது வடகிழக்கு பருவமழை மாவட்டத்தில் பரவலாக பெய்து வருகிறது. இதனால் கலப் பின ரக வெள்ளைச்சோளம் பயிரிடப்பட்ட நிலங்கள்

அமோக விளைச்சலை கண்டுள்ளது. இரண்டரை மாத பயிரான இந்த சோளத்தின் வளர்ச்சிக்கு இதமான வெப்பம், மிதமான குளிர் மிகவும் அவசியம். நோய் தாக்குதல் அதிகமின்றி வளர்ந்திருப்பதும் விவசாயிகளை மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது. ஒரு ஏக்கருக்கு விவசாயிகள் ரூ.7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை செலவு செய்துள்ளனர். வழக்கத்தை விட இம்முறை விளைச்சல் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். அறுவடை யின் போது ஏக்கருக்கு 10 மூடை வரை அதிகமாக கிடைக்க வாய்ப்புள்ளதால் மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## அடைமழை நின்றது அறுவடை துவங்கியது

உத்தமபாளையம், :கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் பெய்து வந்த தொடர்மழை நின்றதால், அறுவடை பணிகளை விவசாயிகள் துவக்கி உள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில் தொடர்ந்து வடகிழக்கு பருவமழை பெய்து வந்தது. வயல்களில் தண்ணீர் தேங்கியதால் கம்பம், கூடலூர், உத்தமபாளையம், சின்னமனூர் உட்பட நெல் விவசாயம் அதிகம் செய்யக்கூடிய பகுதிகளில் விவசாயிகள் கவலை அடைந்தனர். கம்பம் பகுதிகளில் கடந்த 10 நாட்களுக்கு முன்பே அறுவடை தொடங்கிவிட்டது. நன்றாக நெல் விளைந்த நிலையில் தற்போது அறுவடை செய்யாவிட்டால் நெல்மணிகள் வயல்களிலேயே உதிர்ந்து விடக்கூடிய ஆபத்தும் இருந்ததால் விவசாயிகள் தவித்து வந்தனர். கடந்த 10 நாட்களாகவே கனமழை காரணமாக அறுவடை பணிகளை துவக்க முடியாமல் விவசாயிகள் தவித்து வந்தனர். அறுவடை இயந்திரங்களும் வயல்களுக்குள் செல்ல முடியாத நிலை காணப்பட்டது. கடந்த 2 நாட்களாக மழை குறைந்துள்ள நிலையில் விவசாயிகள் அறுவடையை தொடங்கி உள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், வயல்களில் தண்ணீர் தேங்கியதால் அறுவடை பணிகளை துவங்க முடியவில்லை. தற்போது மழை குறைந்துள்ளதால் வயல்களில்

உடனடியாக அறுவடை செய்யவேண்டிய சூழலில் உள்ளோம். இதற்காக இயந்திர அறுவடையில் தீவிரம் காட்டி வருகிறோம் என்றனர்.

**<u>வெங்காயம் சாகுபடி குறித்த பயிற்சி முகாம்</u>**

நாமக்கல், :சின்னவெங்காயத்தில் உயர் தொழில்நுட்ப சாகுபடி குறித்த இலவசப் பயிற்சி வகுப்பு நாமக்கல் வேளான் அறிவியல் நிலையத்தில் வரும் 13ம் தேதி காலை 10 மணிக்கு நடக்கிறது. இதில், சின்ன வெங்காயத்தில் உள்ள உயர் ரகங்கள், கோ 5 ரக நாற்று உற்பத்தி, நாற்றங்கால் மேலாண்மை, நடவு வயல் தயாரிப்பு, சொட்டு நீர்ப்பாசனம், உர நிர்வாகம், களை நிர்வாகம், பூச்சி, நோய் நிர்வாக முறைகள், சேமிப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் 04286266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்ணில் முன்பதிவு செய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>அரசு கூட்டுறவு ஏல மையத்தில் 74 % தேயிலை தூள் விற்பனை</u>**

குன்னூர், : குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 45வது ஏலம் நேற்று முன்தினம் நடந்தது. இதில் மொத்தம் 4 லட் சத்து60 ஆயிரத்து 76கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 1 லட்சத்து 72 ஆயிரத்து 138 கிலோவும், டஸ்ட் ரகம் 2லட்சத்து 87 ஆயிரத்து 938 கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் தரமான தேயிலை தூளை மட்டுமே கொள் முதல் செய்தனர். 74சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன் அனைத்து ரக த்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 வரை விலை சரிந்தது. இந்த வார விலை நிலவரப்படி இலை ரகத்தில் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு ரூ.43 முதல் ரூ.47, உயர் வகை ரூ50 முதல் ரூ.61, டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.47 முதல் ரூ.52, உயர் வகை ரூ.53 முதல் ரூ.58 வரை விலை கிடைத்தது. கடந்த

சில வாரங்களாக இந்த ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனையும் அதன் விலை யும் சரிந்து வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## தென்னையை தாக்கும் கொண்டை வளைதல் நோய் கட்டுப்படுத்தும் வழிமுறை விவசாயிகளுக்கு யோசனை

சேதுபாவாசத்திரம்,: தென்னையை தாக்கும் கொண்டை வளைதல் மற்றும் நுனி சிறுத்தல் நோயை கட்டுப்படுத்தும் வழிமுறை விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: தென்னையில் கொண்டை வளைதல் நோயானது போரான் சத்து பற்றாக்குறையால் ஏற்படுகிறது. 3 ஆண்டு வயதுடைய இளம் மரங்களில் இந்நோய் காணப் படும். தென்னை இலைகள் சிறுத்து விரிவடையா மலும், இலைகள் இயல் பான நிலையில் விரிவடையாமல் ஒன்றுக்கொன்று பின்னி கொண்டு வெளிவர இயலாத நிலையில் காணப் படும். வளர்ந்த மரங்களில் இலைகளின் வளர்ச்சி குறைந்து மட்டைகள் குருத்து பாகத்திலிருந்து வளைந்து காணப்படும். குறைபாடு முற்றிய நிலையில் குரும்பைகளும், இளம்கன்றுகளும் உதிர்ந்துவிடுகின்றன. இதை நிவர்த்தி செய்ய மரம் ஒன்றுக்கு 50 கிராம் வெண்காரம் (போராக்ஸ்) 2 முறை தொடர்ந்து 3 மாத இடைவெளியில் அளிப்பதால் இலைகள் நன்றாக பிரிந்து வளர்ச்சியடைகிறது. வேர் மூலம் 25 பி.பி.எம் அளவு போரான் கரைசலை செலுத்துவதால் மரம், போரான் குறைபாட்டிலிருந்து உடனடியாக நிவர்த்தியடைகிறது. எனினும் மண்ணில் போராக்ஸ் இடுவது மரத்துக்கு நீண்ட கால பலனை கொடுக்கும். நுனி சிறுத்தல் நோயா னது ஆரம்ப நிலையில் மட்டைகள் மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடன் தோற்றமளிக்கும். இது தொடரும்போது இலை இனுக்குகளில் பச்சையம் குறைந்த சூரியஒளியின் மூலம் தாவர உணவு தயாரித்தல் வெகுவாக தடைப்படுகிறது. இதனால் மரத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு மட்டைகளின் நீளம், அகலம் குறைந்து சிறுத்துவிடுகின்றன. மட்டைகளின் எண்ணிக்கை குறை வதுடன்

பாலைக ளின் உற்பத்தி குறைந்து அளவில் சிறுத்தும் காணப்படும். காய்களின் உற்பத்தி எண்ணிக்கை குறைகிறது. மேலும் காய் கள் சிறுத்து, தண்ணீர் வற்றி பருப்பின் அளவு குறைந்து காணப்படும். குறைபாடு முற்றிய நிலையில் வளர்ச்சி பகுதி முற்றிலும் நிறுத்தப்பட்டு தண்டு பகுதி பென்சில் முனை போன்று சிறுத்து மரம் பட்டுவிடுகிறது. இதை நிவர்த்தி செய்ய ஆரம்ப நிலையில் உள்ள மரங்களை மட்டுமே காப்பாற்ற முடியும். பெர்ரஸ் சல்பேட் 2000 பி.பி.எம் (2 கிராம் 1 லிட்டர் நீரில்) செலுத்தலாம் அல்லது மரம் ஒன்றுக்கு துத்தநாக சல்பேட், தாமிர சல்பேட், மாங்கனீசு சல்பேட், பெர்ரஸ் சல்பேட் மற்றும் போராக்ஸ் இவை ஒவ்வொன்றும் 225 கிராம் மற்றும் அம்மோனியம் மாலிப்டேட் 10 கிராம் ஆகிய நுண்ணூட்ட சத்துக்களை 10 லிட்டர் தண்ணீரில் கரைத்து மரத்தின் வேர் பகுதியில் ஊற்ற வேண்டும். மேலும் 10 நாட்களுக்கு ஒருமுறை கோடையில் தண்ணீர் பாய்ச்சுவது அவசியமாகும். பென்சில் முனை தோற்றத்துடன் காணப் படும் மரத்தை வெட்டி அகற்றிவிட்டு தென்னங்கன்றுகளை மீண்டும் நடுவது நல்லது.

## <u>தென்னையை தாக்கும் காண்டாமிருக வண்டுகள் இனக்கவர்ச்சி மூலம் கட்டுப்படுத்த ஆலோசனை</u>

ராமநாதபுரம், : தென்னையை தாக்கும் காண்டாமிருக வண்டுகள் மற்றும் சிவப்புக்கூன் வண்டுகளை இனக்கவர்ச்சி மூலம் கட்டுப்படுத்தலாம் என வேளாண்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். இனக்கவர்ச்சி பொறியிலுள்ள ஆண் பூச்சி யால் கவரப்படும் பெண் பூச்சிகள், பொறியில் வந்து விழும். அதனை சேகரித்து அழிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர். மண்டபம் வட்டாரத்தில் சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக தென்னை மரங்களில் பலவிதமான நோய் தாக்குதல் தென்படுகிறது. இதனை சமாளிக்க முடியாமல் விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர். தென்னை பால்பிடிக்கும்

தருணங்களில் காண்டாமிருக வண்டுகள் மற்றும் சிவப்புக்கூன் வண்டுகள் அதிகளவில் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் தென்னை குரும்பை உதிர்ந்து காய்பிடிப்பு குறைந்துவிடுகிறது. இதனால் விவசாயிகளுக்கு மிகவும் குறைந்த அளவி லேயே மகசூல் கிடைக்கிறது. கடும் நஷ்டம் ஏற்படுகிறது. இவ்வகை நோயை கட்டுப்படுத்த மண்டபம் வட்டார வேளாண்மை விரிவாக்க துணை இயக்க திட்டத்தின் கீழ் 29 தென்னை விவசாயிகளுக்கு காண்டாமிருக வண்டுகள் மற்றும் சிவப்புக்கூன் வண்டு இனக்கவர்ச்சி பொறிகள் வழங்கப்பட்டன. வாலாந்தரவை, பாம்பன், சாத்தக்கோன்வலசை, பெருங்குளம், என்மனங்கொண்டான் ஆகிய கிராமங்களில் இனக்கவர்ச்சி பொறி மூலம் இந்த இரண்டு வகை வண்டுகளையும் கட்டுப்படுத்தும் முறை குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இனக்கவர்ச்சி பொறியிலுள்ள ஆண் பூச்சியின் திரவ ஹார்மோன் வாசனையால், பெண் பூச்சிகள் கவர்ந்திழுக்கப்பட்டு பொறியில் வந்து விழும். பின்பு அதனை சேகரித்து அழிக்க வேண்டும். இனக்கவர்ச்சிப் பொறி மூலம் காண்டாமிருக வண்டுகள் மற்றும் சிவப்புக்கூன் வண்டுகளை கட்டுப்படுத்துதல் குறித்த தொழில்நுட்பங்களை வேளாண்மை விரிவாக்க துணை இயக்க திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் பானுமதி மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை அணுகி தெரிந்து கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) பானுபிரகாஷ் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை திட்டங்களை கலெக்டர் ஆய்வு</u>**



அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் செயல் படுத்தப்படும் திட்டங் களை கலெக்டர் சரவணவேல்ராஜ் பார்வை யிட்டு ஆய்வு மேற்கொண்டார். கலெக்டர் ஆய்வு அரியலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து பயனா ளிகளை நேரில் சந்தித்து கலெக்டர் சரவணவேல்ராஜ் ஆய்வு மேற்கொண்டார். இதில் தேசிய தோட் டக்கலை இயக்க திட்டத்தின் மூலம் 2013–14ம் ஆண்டில் அரியலூர் வட்டாரத்தில் மேலக்கருப்பூர் கிராமத்தில் அய்யனார் வயலில் நடவு செய்யப்பட்ட எலுமிச்சை வயலை அவர் ஆய்வு செய்தார். மேலும் வாழை மரங்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அரசு திட்டத் தின் பயன்களை அதிக விவசாயிகளுக்கு பயன்படும் வகையில் அலுவலர்கள் செயல்படுத்த வேண்டும் என்று அவர் அறிவுரை வழங்கினார். பின்னர், மேலக்கருப்பூர் கிராமத்தில் செல்வம் என்ற விவசாயி மக்காச்சோளம் பயிரிட்டுள்ளதையும், பெரி யநாகலூர் கிராமத்தில் விஸ் வநாதன் என்ற விவசாயி வயலில் துவரை பயிரிட்டுள் ளதையும், அஸ்தினாபுரம் கிராமத்தில் சுரேஷ் என்ற விவசாயி 1 ஏக்கரில் மக் காச்சோளம் பயிரிட்டுள் ளதையும், கருணா மூர்த்தி என்பவர் அணுசரணை ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் நெல் உற்பத்தி செய்துள்ளதை யும் கலெக்டர்

நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மிளகாய்–வெங்காயம் சாகுபடி மேலும், தேசிய நுன்னீர் பாசன திட்டத்தில் 2013–14ம் ஆண்டு அரியலூர் வட்டா ரத்தில் அருங்கால் கிராமத் தில், முருகேசன் என்ற விவசாயி வயலில் சொட்டு நீர்ப்பாசனத்தில் மிளகாய் மற்றும் வெங்காயம் சாகுபடி செய் யப்பட்டுள்ளதை கலெக்டர் பார்வை யிட்ட போது 1 ஏக்கர் நிலத்தில் ரூ.30 ஆயிரம் லாபம் பெறுவதாக விவசாயி முருகேசன் தெரிவித்தார். மேலும், சொட்டுநீர் பாச னத்தில் நிரந்தர பயிரான மா பயிரிட்டு அதில் ஊடு பயிராக பருத்தி பயிர் செய்துள்ள சாமிநாதனின் விவசாய நிலத் தில் கலெக்டர் பார்வையிட்டபோது, தேசிய தோட்டக்கலை இயக்க திட் டத்தின் மூலம் மா பயிரிட 1 ஹெக்டேருக்கு ரூ.9,900 மானியம் வழங் கப்பட்ட தாகவும், சொட்டு நீர் பாசனம் அமைக்க 1 ஹெக்டே ருக்கு 75 சதவீதம் மானியமாக ரூ.73 ஆயிரத்து 816 வழங்கப் பட்டதாகவும் சாமிநாதன் தெரிவித்தார். பருத்தியில் சொட்டு நீர் பாசனத்தின் மூலம் பயிர் செய்வதால் 1 ஹெக்டேருக்கு ரூ.50 ஆயிரம் லாபம் பெறுவதாகவும் தெரிவித்தார். இந்த ஆய்வின்போது வேளாண் இணை இயக்குனர் குணசேகரன், தோட்டக்கலை துணை இயக்குனர் சுப்பையா, உதவி இயக்குனர்கள் மோகன், சரண்யா மற்றும் வேளாண் அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண் டனர்.

**<u>கால்வாயை தூர்வாரும் பணி</u>**



ஸ்ரீவைகுண்டம் வடகாலில் காடுவெட்டியை அடுத்த முக்கூட்டு 1–வது மடை என்று அழைக்கப்படும் முதல் உபகால்வாயில் ஸ்டெர்லைட் நிறுவனம் சார்பில் ரூ.12 லட்சம் செலவில் தூர்வாரும் பணி தொடங்கியது. நிறுவன துணை தலைவர் தனவேல் தலைமை தாங்கினார். தாமிரபரணி திட்டக்குழு

தலைவர் உதயசூரியன் தூர்வாரும் பணியை தொடங்கி வைத்தார். நிறுவன பொதுமேலாளர் குமாரவேந்தன், சீனிவாசன், முத்துகுமார், ஸ்ரீதரன், தியாகராஜன், அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் முருகன், டி.வி.எஸ். அறக்கட்டளை ஆலோசகர் முருகன், பஞ்சாயத்து தலைவர்கள் ராஜ், அப்பாத்துரை, அருண் பிரின்ஸ் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஸ்ரீவைகுண்டம் அணையில் இருந்து கோரம்பள்ளம் வரையிலான வடகாலின் மொத்த தூரம் 38 கிலோ மீட்டர் ஆகும். இதில் முதல் உப கால்வாய் வழியாக வடக்கு மாங்கொட்டாபுரம், மங்கலகுறிச்சி வழியாக செபத்தையாபுரத்துக்கு தண்ணீர் செல்கிறது. இவற்றில் உள்ள அமலைச் செடிகள், உடை மரங்களை அகற்றும் பணி 20 நாட்கள் நடைபெறும். இதன் மூலம் சுமார் 25 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

## திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மை துறையில் டிரைவர் பணி விண்ணப்பிக்க 18–ந்தேதி கடைசி நாள்

திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மை துறையில் டிரைவர் பணிக்கு விண்ணப்பிக்க வருகிற 18–ந்தேதி கடைசி நாள் என்று கலெக்டர் மதிவாணன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

### 18–ந்தேதி கடைசிநாள்

வேளாண்மை துறையில் புதிதாக வாங்கப்பட்டுள்ள வாகனத்தை இயக்குவதற்கு ஒப்பந்த அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு ரூ.9 ஆயிரம் ஊதியம் அடிப்படையில் நியமனம் செய்யப்பட உள்ளது. அதன்படி இப்பணிக்கு 8–ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நடைமுறையில் உள்ள இலகு வாகன ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வேண்டும். இலகு ரக

வாகனம் ஓட்டுதல் மற்றும் பராமரித்தல் பணியில் 2 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். நல்ல பார்வை திறன் பெற்றிருக்க வேண்டும். மோட்டார் வாகனத்தின் பழுதினை பற்றி தெரிந்திருக்க வேண்டும். அரசு நிர்ணயித்த வயது வரம்புக்குள் இருக்க வேண்டும். தகுதி உள்ள டிரைவர்கள் தங்களது விண்ணப்பங்களை, சான்றிதழ்களின் நகல்களுடன் திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்திற்கு வருகிற 18–ந்தேதி காலை 10 மணிக்கு நேரில் வர வேண்டும். ஓட்டும் திறன் குறித்த தேர்வில் தேர்வு செய்யப்படும் டிரைவர்கள் திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களில் நியமனம் செய்யப்படுவார்கள். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.